VNR10SS

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2024

# வகுப்பு 10

காலம்: 3.00 மணி | சமூக அறிவியல் | மதிப்பெண்கள்: 100

## பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:** **14×1=14**

1) மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?
அ) ஆகாயப் போர் முறை ஆ) பதுங்குக் குழிப்போர் முறை
இ) நீர் மூழ்கிக் கப்பல் போர் முறை ஈ) கடற்படைப் போர் முறை
2) உலகத்தின் எந்தப்பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை?
அ) ஐரோப்பா ஆ) லத்தீன் அமெரிக்கா இ) இந்தியா ஈ) சீனா
3) 'ராஸ்ட் கோப்தார்' யாருடைய முழக்கம்?
அ) பார்சி இயக்கம் ஆ) அலிகார் இயக்கம்
இ) இராமகிருஷ்ணா ஈ) திராவிட மகாஜன சபை
4) வேலூர் கோட்டையில் புதிய இராணுவ விதிமுறைகளை அறிமுகப்படுத்த காரணமாயிருந்த தலைமை தளபதி யார்?
அ) கர்னல் பேன் கோர்ட் ஆ) மேஜர் ஆம்ஸ்ட்ராங்
இ) சர் ஜான் கிரடாக் ஈ) கர்னல் அக்னியூ
5) 1709 இல் தரங்கம்பாடியில் ............ ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவினார்.
அ) கால்டுவெல் ஆ) F.W. எல்லிஸ் இ) சீகன்பால்கு ஈ) மீனாட்சி சுந்தரனார்
6) இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல்
அ) 2500 கி.மீ ஆ) 2933 கி.மீ இ) 3214 கி.மீ ஈ) 2813 கி.மீ
7) தென்னிந்தியாவின் 'மான்செஸ்டர்' என்று அழைக்கப்படும் நகரம்
அ) சேலம் ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோயம்புத்தூர்
8) தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது?
அ) இராமநாதபுரம் ஆ) நாகப்பட்டினம் இ) கடலூர் ஈ) தேனி
9) தமிழ்நாட்டின் மிகப்பெரிய நீர்மின்சக்தி திட்டம் ............
அ) மேட்டூர் ஆ) பாபநாசம் இ) சாத்தனூர் ஈ) துங்கபத்ரா
10) இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?
அ) ஒருமுறை ஆ) இருமுறை
இ) மூன்று முறை ஈ) எப்பொழுதும் இல்லை
11) அமைச்சரவையின் தலைவர்
அ) முதலமைச்சர் ஆ) ஆளுநர் இ) சபாநாயகர் ஈ) பிரதம அமைச்சர்
12) இந்தியா தன்து மிக நீண்ட நில எல்லையை எந்த நாட்டோடு பகிர்ந்து கொள்கிறது?
அ) வங்காளதேசம் ஆ) மியான்மர் இ) ஆப்கானிஸ்தான் ஈ) சீனா
13) ............ இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழிவகுத்தது.
அ) நீலப்புரட்சி ஆ) வெள்ளைப் புரட்சி இ) பசுமைப்புரட்சி ஈ) சாம்பல் புரட்சி
14) இந்தியாவில் உள்ள வரிகள்
அ) நேர்முக வரிகள் ஆ) மறைமுக வரிகள்
இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) ஈ) ஏதுமில்லை

## பகுதி - II

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **10×2=20**
**(வினா எண் 28-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

15) மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களை எழுதுக.
16) இராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து குறிப்பு வரைக.
17) கிழக்கு மற்றும் மேற்கில் அமையப்பெற்ற பாளையங்களைக் கண்டறிந்து எழுதுக.
18) பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
19) தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
20) லட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.
21) அதிக மழை பெறும் பகுதிகளைக் குறிப்பிடுக.
22) பன்னாட்டு வணிகம் - வரையறு.
23) தமிழ்நாட்டின் முக்கிய தீவுகளைக் குறிப்பிடுக.

24) தமிழ்நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களைப் பட்டியலிடுக.
25) குடியுரிமை என்பதன் பொருள் என்ன?
26) சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
27) வரிகளின் வகைகள் யாவை? எடுத்துக்காட்டு தருக.
28) இந்தியாவில் உள்ள பல்நோக்கு திட்டத்தின் பெயர், ஆறுகள், பயனடையும் மாநிலங்கள் ஏதேனும் ஐந்து எழுதுக.

## பகுதி - III

**III. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:**
**(வினா எண் 42-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)** **10×5=50**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
   i) ஐரோப்பியக் குழுமத்தின் தலைமையகம் ............... நகரில் அமைந்துள்ளது.
   ii) .............. சமரச வேத சன்மார்க்க சங்கத்தை நிறுவினார்.
   iii) ................ தமிழ்நாட்டின் மாநில விலங்கு ஆகும்.
   iv) சாத்தனூர் அணை ............... ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
   v) இந்தியா, தென்கிழக்காசியாவிற்குள் செல்வதற்கான ஒரு நுழைவு வாயிலாக ............... இருக்கிறது.
30) ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை விளக்குக.
31) இரண்டாம் உலகப்போரின் விளைவுகள் ஆய்வு செய்க.
32) சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விளக்குக.
33) **வேறுபடுத்துக:**
   i) தாமிரபரணி மற்றும் காவிரி
   ii) உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்
   **காரணம் கூறுக:** வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்
34) இந்தியத் தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.
35) தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.
36) இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள் விளக்குக.
37) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
38) அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு வரைக.
39) பன்னாட்டு நிறுவனங்களின் (MNC) நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுதுக.
40) கருப்பு பணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக.
41) **கீழ்க்காண்பவற்றிற்கு காலக்கோடு வரைக:**
   1920 - 1940 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து இந்திய நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.
42) **இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
   i) ஜாலியன் வாலாபாக் ii) பாரக்பூர் iii) டில்லி
   iv) ஜான்சி v) வேதாரண்யம்

## பகுதி - IV

**IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **2×8=16**

43) அ) வேலூரில் 1806 இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.

**(அல்லது)**


ஆ) 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்காக இட்டுச்சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.


44) அ) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
   (i) காரகோரம் (ii) தார் பாலைவனம் (iii) மேற்குத்தொடர்ச்சி மலை
   (iv) சோட்டா நாகபுரி பீடபூமி (v) லட்சத்தீவுகள்
   (vi) வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை
   (vii) பன்னாட்டு விமான நிலையம் ஒன்று (viii) பருத்தி விளையும் பகுதி


**(அல்லது)**

ஆ) **தமிழ்நாடு வரைபடத்தில் குறிக்கவும்:**
   (i) சோழமண்டல கடற்கரை (ii) மேற்குத்தொடர்ச்சி மலை
   (iii) மன்னார் வளைகுடா (iv) மேட்டூர் அணை
   (v) தூத்துக்குடி (vi) கோடியக்கரை
   (vii) தேயிலை விளையும் பகுதி (viii) சென்னை

------------


இந்தியா


இந்தியா


தமிழ்நாடு